செ.வெ.எண்.61 **செய்திக்குறிப்பு** நாள். 20.01.2011

வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கணினிவழி இணைத்திட்டத்தின் செயல்பாடு முன்னேற்றம் பற்றி தொழிலாளர் நல அமைச்சர் ஆய்வு

-------------

வேலைவாய்ப்பகங்களைக் கணினிவழி இணைக்கும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ.அன்பரசன் அவர்கள் 20.1.11 அன்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வுக்கூட்டம் எல்காட் நிறுவனத்தின் பயிற்சிக்கூடத்தில் நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் முடிவில் அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவிக்கும்போது 15.9.2010 அன்று அண்ணா பிறந்த நாளில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தில் பதிவு - புதுப்பித்தல் மேற்கொள்ளும் பணிகள் திருப்திகரமாக நிறைவேறி வருவதாகவும், இதேபோன்று காலியிடங்களுக்குப் பட்டியல் அனுப்புதல் போன்ற பணிகளும் சிறப்பாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், இதற்கு இத்துறையின் அனைத்து அலுவலர்களும் சிறப்பாக ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும் தெரிவித்தார். பட்டியல் அனுப்புதல் போன்ற நடவடிக்கைகள் குறைபாடு இன்றி சிறப்பாக நடைபெற மென்பொருள் வடிவமைக்கப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் முதன்மைச் செயலாளர், டாக்டர் த.பிரகாகர் ராவ், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அவர்கள் திட்டத்தில் கண்டறியப்பட்ட இடர்ப்பாடுகள் மற்றும் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்தார். இவ்வாய்வில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு சந்தோஷ் கே மிஸ்ரா அவர்களும், எல்காட் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் டாக்டர்.சந்தோஷ் பாபு அவர்களும் வேலைவாய்ப்புத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை

20.1.2011
சென்னை.

20/1/11

இயக்குநருக்காக
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
சென்னை.32

20 JAN 2011